23.01.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### சேலத்தில் இன்று விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது. சேலம் மாவட்ட ஆட்சியர் க.மகரபூஷணம் தலைமையில் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெற உள்ள இக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு வேளாண்மை தொடர்பான தங்கள் குறைகளை நேரிலும், விண்ணப்பம் மூலமாகவும் தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மானிய விலையில் பண்ணைக்கருவிகள் பெற விண்ணப்பிக்கலாம்

மானிய விலையில் பண்ணை கருவிகள் பெறுவதற்கு வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்திக்குறிப்பு: அனைத்துவிதமான பண்ணைக்கருவிகளையும் மானிய விலையில் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இதன்படி கருவியின் மொத்த விலையில் மானியம் போக மீதித் தொகைக்கு கேட்பு வரைவோலை எடுத்து வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் விவசாயிகள் அளித்தால், விரும்பி தேர்வு செய்த நிறுவனத்திற்கு விநியோக ஆணை வழங்கப்பட்டு, மானிய விலையில் கருவிகள் வழங்கப்படும். பொதுப் பிரிவினருக்கு 40 சத மானியத்திலும், தாழ்த்தப்பட்டவர், பழங்குடியினர், சிறு, குறு விவசாயிகள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சத மானியம் வழங்கப்படுகிறது. மல்லசமுத்திரம், எலச்சிபாளையம், திருச்செங்கோடு, பள்ளிபாளையம், கபிலர்மலை, மோகனூர்(பகுதி) மற்றும் பரமத்தி

ஒன்றியங்களை சேர்ந்த விவசாயிகள் திருச்செங்கோட்டில் உள்ள வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு செல்போன் எண் 9445737605.

நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், வெண்ணந்தூர், கொல்லிமலை, சேந்தமங்கலம், எருமப்பட்டி, புதுச்சத்திரம், மோகனூர்(பகுதி) மற்றும் நாமக்கல் ஒன்றியங்களை சேர்ந்த விவசாயிகள் நாமக்கல்லில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை தொடர்புகொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு செல்போன் எண் 9965667480. விருப்பமுள்ள விவசாயிகள் விண்ணப்பபடிவத்தினைப் பூர்த்தி செய்து, சிட்டா, அடங்கல், நில அளவை வரைபடம், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றை இணைத்து சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் அளிக்கலாம்.

## சிறுதானியங்களை பயிரிட ஆட்சியர் யோசனை

கம்பு, கேழ்வரகு, சோளம், தினை, வரகு, சாமை, குதிரைவாலி போன்ற தண்ணீர் குறைவாக தேவைப்படும் சிறுதானியங்களை பயிரிட்டு விவசாயிகள் அதிக லாபம் ஈட்டி பொருளாதாரத்தில் முன்னேறவேண்டும் என்று சிவகங்கை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி கேட்டுக்கொண்டார். காரைக்குடி அருகே மித்திராவயல் ஊராட்சியில் புதன்கிழமை மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்றது. காரைக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் சோழன் சித.பழனிச்சாமி முன்னிலை வகித்தார். முகாமில் ஆட்சியர் து. முனுசாமி 148 பயனாளிகளுக்கு ரூ. 9.51 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், வீட்டு மனைப்பட்டா, பட்டா மாறுதல் சான்றிதழ்களையும் வழங்கிப் பேசியதாவது: முகாமுக்கு முன்னதாக பெறப்பட்ட 121 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டு, தகுதியானவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. தமிழக அரசு ஏழை, எளிய மக்கள், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. வெளிப்படையான நிர்வாகம், விரைவாக செயல்படுதல், மனிதநேயத்துடன் செயலாற்று தல் போன்றவற்றை அரசு அலுவலர்கள் கடைப்பிடித்து மக்களிடம் நம்பிக்கை ஏற்படுத் தும் வகையில் செயல்படவேண்டும் என்றார் ஆட்சியர். முகாமின்போது பல்வேறு

துறைகளின் சார்பில் அரங்குகளில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை ஆட்சியர் பார்வையிட்டார். முகாமில் தேவகோட்டை கோட்டாட்சியர் சிதம்பரம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் சுப்பிரமணியன், தனி துணை ஆட்சியர் பிச்சப்பா, காரைக்குடி வட்டாட்சியர் கருணாகரன், மித்திராவயல் ஊராட்சித் தலைவர் வெள்ளைச்சாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும்

விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்களை புகுத்துவதன் மூலம் விளைச்சலை அதிகரிக்க முடியும். இதை இன்றைய தலைமுறை வரும் தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று விஐடி துணைத் தலைவர் ஜி.வி.செல்வம் கூறினார். வேலூர் ஏலகிரி அரங்கில் வேளாண்மை சிறு தொழில்களுக்கான புதுப்பிக்கத்தக்க ஆற்றல், அறுவடை செய்வது மற்றும் திறன்மிகு பயன்பாடு குறித்த ஒரு நாள் கருத்தரங்கு வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற ஜி.வி.செல்வம் பேசியது: நாடு விவசாயத்தை நம்பியே உள்ளது. ஆனாலும் இதை நாம் திறம்பட செய்ய தவறுவதால் அதிக விவசாய நிலங்கள் இருந்தும் உற்பத்தியை நம்மால் பெருக்க முடியவில்லை. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இன்றைய தலைமுறையினர் விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்களை புகுத்தி அதிக விளைச்சலை காணுவதற்கான வாய்ப்புகள் குறித்து இன்றைய விவசாயிகளிடம் கொண்டு செல்வதோடு, வருங்கால தலைமுறைக்கும் கொண்டு செல்ல வேண்டும். அடுத்த தலைமுறைக்கு சொத்து சேர்ப்பதை விட, தூய்மையான காற்றையும், நல்ல தண்ணீரையும் நாம் சேமிக்க வேண்டியது அவசியம் என்றார் செல்வம். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலர் விசுவநாதன் தலைமை தாங்கினார். தூர்வாரும் பணியில் விவசாயிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்' திருவாரூர் மாவட்டத்தில் 2015-16 ஆம் நிதியாண்டில் ஆறுகள், வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களை தூர்வாருவதற்கு விவசாயிகளின் பாசன கோரிக்கைகளை ஏற்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் தெரிவித்தார்.

திருவாரூரில் பொதுப்பணித்துறை, நீர்வள ஆதாரத்துறை சார்பில் மேற்கொள்ளவுள்ள ஆறுகள், வாய்க்கால்கள் மற்றும் வடிகால்கள் தூர்வாரும் பணிகள் குறித்த விவசாயிகளின் கருத்துக்கேட்புக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. இந்த கூட்டத்தில் ஆட்சியர் மேலும் பேசியது: மாவட்டத்தில் சுமார் 3,77,779 ஏக்கர் விவசாய பாசன நிலங்களுக்கு 27 முதன்மை ஆறுகள் மற்றும் 651 அ பிரிவு வாய்க்கால்கள் மூலம் பாசன வசதி அளிக்கப்படுகிறது. நிகழாண்டு சம்பா சாகுபடி 1,22,740 ஹெக்டேரில் சம்பாவும், 25,953 ஹெக்டேரில் தாளடியும் சாகுபடி செய்யப்பட்டது. சரியான நேரத்தில் மழை பெய்ததால் பயிர்கள் நல்ல நிலையில் வளர்ந்து கூடுதல் மகசூல் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் பொதுப்பணித்துறை, நீர்வள ஆதாரத்துறை கட்டுப்பாட்டில் 28 ஏரிகளும், 4245 ஊராட்சிக் குளங்களும் உள்ளன என்றார். கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் த. ஜெயசந்திரன், தஞ்சாவூர் கீழ்காவிரி வடிநில வட்ட சிறப்புத் தலைமைப் பொறியாளர் சி. சம்பத், மாவட்ட வருவாய் அலுவலர் த. மோகன்ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**



சேலம்: வட மாநிலங்களில் இருந்து சேலம் லீபஜார், செவ்வாய்பேட்டை மார்க்கெட்டுக்கு துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, பாசிப்பருப்பு வரத்து அதிகரித்துள்ளது. மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் உள்ளிட்ட வட மாநிலங்களில் தானிய வகைகளின் அறுவடை சீசன் தொடங்கியுள்ளதால், அங்கிருந்து சேலம் லீபஜார், செவ்வாய்பேட்டை மார்க்கெட்டுக்கு துவரம் பருப்பு, உளுத்தம்பருப்பு, பாசிப்பருப்பு உள்ளிட்டவைகளின் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் வியாபாரம் சுறுசுறுப்படைந்துள்ளது. இது குறித்து

சேலம் செவ்வாய்பேட்டை மளிகை வியாபாரிகள் கூறியதாவது: வட மாநிலங்களில் துவரம் பருப்பு, உளுத்தம்பருப்பு, பாசிப்பருப்பு உள்ளிட்டவைகளின் அறுவடை தொடங்கியுள்ளது. கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து உளுத்தம்பருப்பும், கோவில்பட்டி, சிதம்பரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பாசிப்பருப்பு வரத்து தொடங்கியுள்ளது. இன்னும் 20 நாட்கள் கழித்து கடலைபருப்பு, கொண்டைக்கடலை, மிளகாய், தட்டை பயிறு, புளி, மிளகு உள்ளிட்ட புது பொருட்கள் வரவுள்ளன. கடந்தாண்டை காட்டிலும் நடப்பாண்டு தானிய வகைகளின் வரத்து அதிகரித்துள்ளது. இவ்வாறு வியாபாரிகள்கூறினர்.

விலைநிலவரம்

நேற்று நிலவரப்படி 100 கிலோ எடைக்கொண்ட துவரம் பருப்பு முதல் தரம் ரூ.8,200 எனவும், இரண்டாம் தரம் ரூ.7,500 முதல் ரூ.7,700 எனவும், உளுத்தம் பருப்பு ரூ.8,000 முதல் ரூ.8,500 எனவும், பாசிப்பருப்பு ரூ.10 ஆயிரம் எனவும் விற்பனை செய்யப்படுகிறது. வரும் வாரத்தில் இந்த பொருட்களின் வரத்து இன்னும் அதிகரிக்கும். அப்போது மூட்டை ஒன்றுக்கு ரூ.750 முதல் ரூ.1000 வரை விலை குறையும் என்று வியாபாரிகள் கூறினர்.

## <u>மாடியிலே பசுமைக் குடில்!</u>



**ஹோம்கார்டன்-வெற்றிக்கதை**

பொழுதுபோக்காகத் தொடங்கிய தோட்டக்கலை ஆர்வம் இன்று பலரது தொழிலாகவே மாறியிருக்கிறது. அதற்கு நல்லதோர் உதாரணம் இது! கோவையைச் சேர்ந்த கனகராஜ் விவசாயப் பின்னணி கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த வர். அதனால் குழந்தைப் பருவத்திலிருந்தே தோட்டக் கலையில் ஆர்வம் அதிகம். பொழுதுபோக்காக மலர் செடிகளை வளர்ப்பதில் ஆரம்பித்தது அவரது

ஈடுபாடு. முதுகலைப் பட்டப் படிப்புக்குப் பிறகு, வீட்டில் காய்கறிச் செடிகளை வளர்க்க திட்டமிட்டார். ஆனால், அவரது அபார்ட்மென்ட்டில் மாடித் தோட்டம் போட அனுமதி கிடைக்கவில்லை. பிறகு என்ன செய்தார் கனகராஜ்? இதோ... அவர் பகிரும் அனுபவங்கள் நமக்கும் பயன் அளிக்கும்! 'மாடித் தோட்டம் அமைக்க முடியாததால், பதப்படுத்தப்படாத தென்னை நார்க்கழிவில் செடிகளை வளர்க்க முயற்சி செய்தேன். விதைகள் முளைக்காமல் அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது. அதனால், காய்கறி மற்றும் கீரை வளர்க்கும் திட்டத்தையே கைகழுவி விடலாம் என முடிவு செய்தேன். கடைசி முயற்சியாக அலுவலக மொட்டை மாடியில் ஒரு மாடித் தோட்டம் அமைத்துப் பார்க்கும் எண்ணம் தோன்றியது. அலுவலகத்தில் அதற்கான சாத்தியங்களை எடுத்துக் கூறினேன், அனுமதி கிடைத்தது! முதல் கட்டமாக ஒரு பசுமைக் குடிலை (Green House) அமைத்து, சில காய்கறிச் செடிகளை வைத்தோம். பசுமைக் குடில் (Shade net house), அதிகமான சூரிய ஒளி செடிகளின் மேல் விழாமல் காப்பாற்றியது, நீர் பயன்பாட்டை குறைத்தது, செடிகளை பூச்சிகள் தாக்குவதைக் குறைத்தது. அத்தோடு செடிகள் நன்றாக, வேகமாக வளரும் சூழலை ஏற்படுத்தியது. நல்ல மகசூல் பெறுவதற்கும் காரணமாக இருந்தது. இப்போது மாடித்தோட்டத்தில் 20 வகை காய்கறிகள், கீரைகள், மூலிகைகள் மற்றும் மருந்துச் செடிகள் பயிரிடுகிறோம். ரசாயன உரங்களையோ, பூச்சிக் கொல்லிகளையோ நாங்கள் பயன்படுத்துவதில்லை. அவற்றுக்கு பதிலாக, மண்புழு, பஞ்சகவ்யம், மாட்டுச் சாணம் போன்ற ஆர்கானிக் உரங்களைப் பயன்படுத்துகிறோம். நாங்கள் மண்ணுக்கு பதிலாக சிதைந்த தென்னை நார்க்கழிவுகளை பயன்படுத்துகிறோம். மண்ணோடு ஒப்பிட்டால் அது எடை குறை வானது. தண்ணீரை 4லிருந்து 6 நாட்களுக்கு தேக்கி வைத்திருக்கும். மாடித் தோட்டத்தில் கிடைத்த வெற்றிக்குப் பிறகு, அதையே நாங்கள் 'பயோ ப்ளூம்ஸ்' என்ற பெயரில் தொழிலாகத் தொடங்கினோம். இப்போது வாடிக்கையாளர்களுக்கு மாடித் தோட்டம் அமைத்துத் தருகிறோம்...'' என்கிற

கனகராஜ், ஆர்கானிக் உரங்கள் மற்றும் ஆர்கானிக் பூச்சிக்கொல்லிகளையே பயன்படுத்தி அறுவடை செய்யும்படி ஒவ்வொருவருக்கும் பரிந்துரைக்கிறார்!

**ஐரோப்பாவில் தடை நீக்கம் கிருஷ்ணகிரி மாம்பழத்திற்கு ஏற்றுமதி வாய்ப்பு அதிகரிப்பு**

கிருஷ்ணகிரி, : ஐரோப்பிய யூனியனில் இந்திய மாம்பழங்களுக்கு தடை நீக்கப்பட்டதால் கிருஷ்ணகிரி மா விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதன் மூலம் ஏற்றுமதி வாய்ப்பு அதிகரிக்கும் என நம்பிக்கை தெரி வித்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 45 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் மா சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளையும் மாங்கனிகள் மிகவும் சுவையாக உள்ளதால் வெளிமாநிலங்களுக்கும், அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பியா போன்ற வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இம்மாவட்டத்தில் விளையும் தோத்தாபுரி எனும் பெங்களூரா வகை மாம்பழத்தில் இருந்தும், அல்போன்சா வகை மாம்பழத்தில் இருந்தும் மாங்கூழ் தயாரிக்கப்படுகிறது. மாங்கூழ் தயாரிக்க கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் பெரியதும், சிறியதுமாக சுமார் 74 மாங்கூழ் அரைக்கும் தொழிற்சாலைகள் இருந்தன. இந்த தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் மாங்கூழ் 62 உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதில் 75 சதவீதம் வளைகுடா நாடுகளான சவுதி அரேபியா, குவைத், ஏமன் போன்ற நாடுகளுக்கும், 15 சதவீதம் ஐரோப்பியா நாடுகளுக்கும், 10 சதவீதம் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்நிலையில் இந்தியாவில் இருந்து ஐரோப்பிய யூனியன் நாடுகளில் இறக்குமதி செய்யப்பட்ட பழங்கள், காய்கறிகளில் நடத்தப்பட்ட சோதனையில் பூச்சித்தொற்று இருப்பதாக கடந்த ஆண்டு கண்டறியப்பட்டது. இதையடுத்து இந்தியாவில் இருந்து மாம்பழங்கள் உள்ளிட்ட சில பழங்கள், சில காய்கறிகளை இறக்குமதி செய்ய கடந்த ஆண்டு மே மாதம் தடை விதிக்கப்பட்டது. இதை தொடர்ந்து இந்திய உணவுக்கழகம், கால்நடை அலுவலகம் ஆகியவை கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடத்திய ஆய்வில், தாவர ஏற்றுமதி சான்றிதழ் வழங்கப்படும் முறை மேம்பட்டிருப்பது

தெரியவந்தது. இதையடுத்து ஐரோப்பிய யூனியனுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மாம்பழங்களில் பூச்சித் தொற்று இல்லாதவாறு தடுக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என இந்தியா உறுதியளித்தது. அத்துடன் இந்தியாவில் இருந்து மாம்பழங்களை இறக்குமதி செய்ய விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என ஐரோப்பிய யூனியன் அமைப்பிற்கு பரிந்துரைக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது இந்தியாவில் இருந்து மாம்பழங்களை இறக்குமதி செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் கிருஷ்ணகிரியில் இருந்து ஏற்றுமதி வாய்ப்பு அதிகரிக்கும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இது குறித்து தமிழக விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலாளர் ராமகவுண்டர் கூறியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 15 வகையான மா ரகங்கள் பயிரிடப்படுகின்றன. இந்த மாவட்டத்தில் உற்பத்தியாகும் பீத்தர், பங்கனப்பள்ளி, மல்கோவா போன்ற ரக மாம்பழங்கள் ஐரோப்பிய யூனியன் பிரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இதனால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் ரூ.100 கோடி வர்த்தகம் ஒவ்வொரு ஆண்டும் நடந்து வந்தது. இந்நிலையில் கடந்த ஆண்டு ஐரோப்பிய யூனியன் பிரதேசத்தில் இந்திய மாம்பழங்களுக்கு தடை விதித்தது. இதை எதிர்த்து தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் பல்வேறு போராட்டங்களும் நடத்தப்பட்டது. இந்த தடையால் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் தரமான மாம்பழத்திற்கு ஏற்ற விலை கிடைக்காமல் பெரும் பாதிப்பிற்குள்ளாகினர். இந்நிலையில் தற்போது ஐரோப்பிய நாடுகளுக்கு மாம்பழங்களை ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது மா விவசாயிகளுக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்துள்ளது. மாம்பழ சீசன் வருகின்ற மார்ச் மாதம் 15ம் தேதி துவங்க உள்ள நிலை இந்த அறிவிப்பு வெளியிட்டுள்ள ஐரோப்பிய யூனியனுக்கும், இந்திய அரசிற்கும் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## சேலம் மார்க்கெட்டுக்கு தர்பூசணி வரத்து தொடங்கியது அதிகரிப்பு

சேலம், : சேலம் மார்க்கெட்டுக்கு தர்பூசணி வரத்து அதிகரிப்பால் விற்பனை களைக்கட்டியுள்ளது. தமிழகத்தில் திருவண்ணாமலை, செங்கம், செய்யாறு,

விழுப்புரம் உள்ளிட்ட பகுதிகளில் தர்பூசணி சாகுபடி அதிகம். வழக்கமாக ஜனவரி 3ம் வாரத்தில் அறுவடை தொடங்கி தொடர்ந்து மே இறுதி வரை நீடிக்கும். இந்தாண்டு பல பகுதிகளில் தர்பூசணி சாகுபடி அதிகரித்துள்ளது. தற்போது அறுவடையும் தொடங்கியுள்ளது. . சேலம் சத்திரத்திற்கு அதிகளவில் தர்பூசணி வந்துள்ளது. இது குறித்து தர்பூசணி மொத்த வியாபாரிகள் கூறியதாவது: தமிழகத்தில் தர்பூசணி சீசன் தொடங்கியதால், சேலம் மார்க்கெட்டுக்கு வரத்து அதிகரித்துள்ளது. கடந்த இரு நாட்களாக 30 டன் தர்பூசணி விற்பனைக்கு வந்துள்ளது. எடையை பொறுத்து கிலோ ரூ40 முதல் ரூ60 என விற்பனை செய்யப்படுகிறது. அடுத்த மாதம் இதன் வரத்து இரு மடங்காக உயரும். அப்போது விலை குறைய வாய்ப்புள்ளது. இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

**<u>இடைப்பாடி புதன்சந்தையில் ரூ7.25 லட்சத்திற்கு காய்கறி விற்பனை</u>**

இடைப்பாடி, : இடைப்பாடியில் புதன்சந்தையில் 66 டன் காய்கறிகள் ரூ7 லட்சத்து 25 ஆயிரத்திற்க்கு விற்பனையானது. இடைப்பாடியில் வாரந்தோறும் புதன்கிழமை வாரச்சந்தை நடைபெறும். பெங்களூர், ஓசூர், கேரளா, ராயக் கோட்டை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் காய்கறிகளை விற்பனைக்காக கொண்டு வருவர். நேற்று நடைபெற்ற சந்தைக்கு 66 டன் காய்கறிகளை கொண்டு வந்திருந்தனர். சின்னவெங்காயம் கிலோ ரூ15 முதல் ரூ25க்கும். பெரிய வெங்காயம் ரூ10 முதல் ரூ25க்கும், தக்காளி ரூ7 முதல் ரூ10க்கும், இஞ்சி ரூ50க்கும், பிட்ருட் ரூ20க்கும், கேரட் ரூ20 முதல் ரூ30க்கும், முட்டைகோஸ் கிலோ ரூ20க்கும், பச்சைமிளகாய் ரூ25 முதல் தி30க்கும், உருளைக்கிழங்கு ரூ20 முதல் ரூ25க்கும், கொத்தமல்லி கட்டு ரூ5 முதல் ரூ15க்கும், தேங்காய் ரூ7 முதல் ரூ20க்கும், ஆப்பிள் கிலோ ரூ100 முதல் ரூ110க்கும் விற்பனை செய்யப்பட்டது. நேற்று நடந்த சந்தையில் முள்ளங்கி விலை சரிந்தது. கிலோ தி8க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆக மொத்தம்

நேற்று 66 டன் காய்கறிகள் விற்றுத்தீர்ந்தது. இதன் மூலம் ரூ7.25 லட்சத்திற்கு வர்த்தகம்நடைபெற்றது.

**விவசாயிகள் மூலிகை பயிர் சாகுபடி செய்ய விழிப்புணர்வு ஏற்படுத்த கோரிக்கை**

கரூர், . மூலிகைப்பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். கரூர் மாவட்டத்தில் மத்திய அரசின் நிதியோடு தேசிய மூலிகைப் பயிர்கள் இயக்கத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் கீழ் மூலிகைப்பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு சாகுபடி செலவுகளை ஈடுகட்டும் வகையில் 50சதவீத மானியம் வழங்கப்படும் சாகுபடி பரப்பினைஅதிகப்படுத்த வேளாண் துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றது. கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி தாலுகாவில் அதிக அளவில் மூலிகைப்பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. மூலிகைப்பயிரிட ஏற்ற பகுதிகள் எவை என கண்டறிய வேண்டும். இதற்கேற்ற மண்வளம் உள்ள பகுதிகளை கண்டறிந்து விவசாயிகளுக்கு அறிவிக்க வேண்டும். இதுகுறித்து விளக்கம் அளிக்கும் வகையில் தேசிய மூலிகைப்பயிர்கள் இயக்க திட்ட விளக்கக் கூட்டங்களை நடத்தி விவசாயிகளிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும். கரூர் மாவட்டத்தில் மூலிகைப்பயிர்கள் குறைந்த பரப்பரளவில் செயல்படுத்தப் பட்டாலும், குளோரியயோசா எனப்படும் கண்வலிக்கிழங்கு பெருமளவு விவசாயிகளால் அதிக அளவில் பயிரிட வாய்ப்புகள் உள்ளன. தேசிய மூலிகைப்பயிர்கள் இயக்கத் திட்டத்தின் கீழ் மூலிகைப் பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு சாகுபடி செலவை ஈடுகட்டும் வகையில் 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. இதுகுறித்து வேளாண்துறை அதிகாரிகள் போதிய விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் என விவசாயி ராமசாமி கூறினார்.

**அரியலூர் மாவட்டத்தில் பருத்தியில் இலைச்சிலந்தி நோய் தாக்குதல் கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி யோசனை**

அரியலூர், : பருத்தியில் சிவப்பு இலைச்சிலந்தி நோய் தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து, அரியலூர் வேளாண் அதிகாரி விவசாயிகளுக்கு

ஆலோசனை தெரிவித்துள்ளார்.வெளியிட்டுள்ள செய்தி அரியலூர் வேளாண் இணை இயக்குனர் குணசேகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: அரியலூர் மாவட்டத்தில் அரியலூரில் கருப்பிலாகட்டளை, கல்லக்குடி, கருப்பூர், பொய்யதாநல்லூர், ஒ.கூத்தூர், கிருஷ்ணாபுரம், ஒட்டக்கோயில் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் 5,883 ஹெக்டேர் பரப்பளவிலும், தா.பழூர் ஒன்றியத்தில் கடம்பூர், உடையவர்தீயனூர், கீழநத்தம், அம்பாப்பூர், சாத்தம்பாடியில் 1,005 ஹெக்டேரிலும், திருமானூர் ஒன்றியத்தில் 2,430 ஹெக்டேர், செந்துறையில் 1,900 ஹெக்டேர் என 10,365 ஹெக்டேர் பரப்பளவில் விவசாயிகள் பருத்தி பயிரிட்டு உள்ளனர். பருத்தி செடியானது மெல்ல வளர்ந்து காய்கள் பழுத்து அறுவடைக்கு தய £ர் நிலையில் இருந்து வரு கிறது. வேளாண்மை இணை இயக்குனர் தலைமையில் அரியலூர் வட்டாரத்தில் வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் குழுவினரால் வயல்வெளி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது, பருத்தி செடியில் பல்வேறு வகையான சாறு உறிஞ்சும் பூச்சிகள், குறிப்பாக வெள்ளை ஈ, தத்துப்பூச்சி, இலைப்பேன், சிவப்பு முரனை இலைச்சிலந்தி போன்ற சாறு உறிஞ்சும் பூச்சிகளும், இலைப்புள்ளி மற்றும் தயிர் புள்ளி நோய்களின் தாக்கம் கண்டயறியப்பட்டது. தற்போது காணப்படும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் காரணமாக இலைகள் வாடி வதங்கி விடுவதுடன், இலைகள் கொட்டி விடுகிறது. இதனால் செடி முழு வதும் இலைகள் இல்லாமல் வெறும் குச்சிகளாக காணப் படும். இவ்வாறு தாக்குத லுக்கு உள்ளான செடிகளில் உள்ள காய்கள் முதிர்ச்சி அடையாமல் வெடித்து விடுவதுடன், பஞ்சின் தரமும் பாதிக்கப்படும். மேலும் உரிய பயிர் பாதுகாப்பு முறைகளை கையாளவில்லை என்றால் பாதிக்கப்பட்ட செடிகள் மண்ணிலுள்ள சத்துக்களை எடுக்க முடியாததுடன் மண் வாழ் நோய் காரணிகள் மூலம் 2ம் நிலை தாக்குதலுக்கு உள்ள £கி செடிகள் முழுவதும் காய்ந்து கருகி விடும். இதனை விவசாயிகள் வாடல் நோ ய் என தவறாக கருத வேண் டாம். மேலும் வெள்ளை ஈ, தத்துப்பூச்சி போன்ற சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு தயோ மீத்தாச்சம் 25கீறி - 50

கிராம் அல்லது அசிட்டாமிபிரிட் 20 ஷிறி - 60 கிராம் தெளிக்க வேண்டும். மேலும் சிவப்பு இலைச்சிலந்தியை கட்டுப்படுத்த ஏக்கருக்கு புரப்பர்கைட்-57 ணிசி 400 மிலி அல்லது ஸ்பைரோமெசிபின் 22.9 ஷிசி-200 மிலி அல்லது நனையும் கந்தகம் 500 கிராம் இதனில் ஏதாவது ஒன்றை தெளிக்க வேண்டும். தயிர் புள்ளி நோய் மற் றும் இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த ஏக்கருக்கு ஹெக்சாகோனசோல் 5 ணிசி-200 மிலி அல்லது புரோப்பிகோனசோல் 25 ணிசி-200-மிலி இதில் ஏதா வது ஒன்றினை தெளிக்க வேண்டும். மேற்காணும் பூச் சி மற்றும் பூஞ்சான கொல் லிகளை தெளித்த 4 அல்லது 5 நாட்களுக்கு பிறகு நீரில் எளிதில் கரையும் உரமான பொட்டாசியம் நைட் ரேட்(13:0:45:) லிட்டருக்கு 10 கிராம் என்ற அளவில் தெ ளிக்க வேண்டும். இதனால் பூச்சி மற்றும் நோய் தாக்குதலில் இருந்து பருத்தி பயிர் பாதுகாக்கப்பட்டு பிஞ்சு மற்றும் காய்கள் முற்றி தரமான பஞ்சு கிடைப்பதன் மூலம் விவசாயிகள் அதிக மகசூல் பெற முடியும்.

## <u>சம்பா பயிரில் நெற்பழ அழுகல் நோய் கட்டுப்படுத்துவது எப்படி?வேளாண் வல்லுனர் யோசனை</u>

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் சம்பா பயிரில் நெற்பழ அழுகல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து வேளாண் தொழில்நுட்ப வல்லுனர் விவசாயிகளுக்கு யோசணை தெரிவித்துள்ளார். சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் ராஜ்கலா வெளியிட்டுள்ள அறிக்கை: அரியலூர் மாவட்டத்தில் 17 ஆயிரம் ஹெக்ட ரில் நெற் பயிர் சாகுபடி செய்யப் பட்டு உள்ளது. தற்சமயம் இப்பயிரில் நெற்பழ அழுகல் நோய் தாக்குதல் தா.பழூர், திருமானூர் வட்டாரத்தில் பரவலாக காணப்படுகிறது. இது ஒரு வகை பூஞ்சாணத்தால் உண்டாகிறது. இதன் அறிகுறிகளாக இப்பூஞ்சாணாம் தாக்கப்பட்ட செடியில் உள்ள கதிர் மணிகள் முதலில் பச்சை கலந்த பழுப்பு நிற நுண் துகள் பந்து போன்று மாறி, பின்பு சமமாகவும், மென்மையாகவும் உருமாறி மஞ்சள் நிற பூசண வித்துக்களால் நெல் மணியை சுற்றி இருக்கும். வெல்வெட் போன்ற வளர்ச்சி நெல்மணிகளின் மீது காணப்படும். கதிர்களின்

குறைந்த அளவு நெல்மணிகள் மற்றும் நோய் தாக்கியிருக்கும் மற்றவை எல்லாம் நல்ல மணிகளாகவே இருக்கும். இந்நோய் தாக்குதலால் நெற்பயிரில் மகசூல் குறைவதோடு மட்டுமின்றி, தானியங்களின் தரமும் குறைந்து விடுகிறது. மேலும், நோய் தாக்கிய வயலிலிருந்து பெறப்பட்ட விதைகளின் முளைப்புத் திறன் குறைந்து காணப்படும். நோய் கிருமிகள் காற்று, மண் மற்றும் விதைகள் மூலம் பரவக்கூடிய தன்மையுடையது. இந்நோயின் தாக்குதல் கோ43 நெல் ரகத்தில் அதிகமாக காணப்படுகிறது. இதை கட்டுப்படுத்துவதற்கு பருவத்தே பயிர் செய்தல் தரமான விதைகளை தேர்ந்தெடுத்து விதைக்கவும். அறுவடை யின் போது நோய் பூஞ்சாணம் தாக்கிய பயிர்களில் உள்ள வைக்கோல் மற்றும் கழிவுகளை அழித்துவிட வேண்டும். கார்பென்டாசிம் 4 கிராம் கிலோ விதைக்கு அல்லது சூடோ மோனாஸ் கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைத்தல் வேண்டும். அதிகமாக தழைச்சத்து இடுவதை தவிர்த்து பிரித்து இட வேண்டும். புரப்பிகோனசோல் 200 மி.லி ஏக்கர் அல்லது காப்பர் ஹைட்ராக்சைடு 500 கிராம் ஏக்கர் (2.5 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில்) + 200 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் ஒட்டும் திரவம் கலந்து இரு முறை 10 சதம் பூத்திருக்கும் தருணத்திலும் மற்றும் 75 சதம் பூத்திருக்கும் தருணத்திலும் தெளித்து கட்டுப்படுத்தலாம். இவ்வாறு செய்வதன் மூலம் நெற்பழ அழுகல் நோய்தாக்குதலை கட்டுப்படுத்தி அதிக மகசூல் பெறலாம். மேலும் தகவல் பெற 9786379600 என்ற அலைபேசி எண்ணில் தெடர்பு கொண்டு பயன் பெறலாம் என்றார்.

## புதுகையில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

புதுக்கோட்டை,: விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் புதுகை கலெக்டர் அலுவலகத்தில் நாளை நடைபெற உள்ளது. விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நாளை (23ம் தேதி) காலை 10 மணிக்கு புதுகை கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் கணேஷ் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் பலதுறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டு விவசாயிகளின் விவசாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர். எனவே,

புதுகை மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். இத்தகவலை கலெக்டர் கணேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்தெரிவித்துள்ளார்.

**<u>குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தரும் பட்டர் ரோஸ் விவசாயி விளக்கம்</u>**

புதுக்கோட்டை, : குறைந்த முதலீட்டில் அதிக லாபம் கிடைக்கும் பட்டர் ரோஸ்சை விவசாயிகள் பயிரிட்டு பயனடையலாம் என முன்னோடி விவசாயி கூறினார். புதுக்கோட்டை மாவட்டத்தில் பல ஆண்டுகளாக மழை இல்லாமல் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், புதுக்கோட்டையை அடுத்த செட்டியாப்பட்டியில் வசித்து வரும் ராமலிங்கம் தனக்கு சொந்தமான ஒரு ஏக்கர் நிலத்தில் பட்டர் ரோஸ் செடிகளை பயிரிட்டுள்ளார். இதுகுறித்து விவசாயி ராமலிங்கம் கூறுகையில், இந்த பட்டர் ரோஸ் செடிகளை அரசு பண்ணைகளில் இருந்து வாங்கி பயிரிட்டுள்ளேன். இதற்கு மாதத்திற்கு ஒரு ஏக்கருக்கு உரம் மற்றும் மருந்துகளுக்கு ரூ.1,000 முதல் 2,000 வரைதான் செலவு செய்யப்படுகிறது, இந்த பூச்செடியை பயிரிட்ட ஒரு மாத காலத்திற்குள் பூக்கள் பூக்க தொடங்கி விடுகிறது. தினந்தோறும் 3 கூடைகள் முதல் 5 கூடைகள் வரை பூக்கள் பறிக்கப்பட்டு புதுக்கோட்டையில் உள்ள பூ மார்க்கெட்டுக்கு கொண்டு வந்து ஒவ்வொரு நாளைக்கு ஏற்றார்போல் விலை நிர்ணயம் செய்யப்பட்டு பூக்கள் ஏலத்தில் விடப்பட்டும். இது பல்வேறு விழா காலங்களுக்கு ஏற்ப விலை ஏற்றம், இறக்கம் இருக் கும். ஆனால், ஒரு மாதத்திற்கு எங்களுக்கு செலவுகள் போக ரூ.15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை லாபம் கிடைக்கிறது. கிணற்று பாசனத்தைக் கொண்டு குறைந்த அளவு தண்ணீர் பாய்ச்சினாலே போதும் என்றார். மாற்றுப் பயிர்களால் பயன் புதுக்கோட்டை மாவட்டத்தில் மழை பெய்யாமல் பெரும்பாலான விவசாயிகள் விவசாய தொழிலையே விட்டு விட்டு சென்றுள்ள நிலையில், செட்டியாப்பட்டி யில் உள்ள விவசாயிகள் காலத்திற்கு ஏற்ப இதுபோன்ற புது யுக்திகளை கையாண்டு குறைந்த செலவில் அதிகம் லாபம் தரக் கூடிய மாற்று பயிர்களை பயிரிட்டு பயனடைந்து வருகின்றனர். இதேபோல் புதுகை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருக்கும் விவசாயிகள் காலத்திற்கு ஏற்ப இது போன்ற பயிர் மற்றும் பூச்செடிகளை பயிரிட்டு

பயனடைலாம் என்பதே பொதுவான கருத்தாக உள்ளது.

**<u>சர்க்கரை நோயாளிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி தரும் விலை மலிவான மத்தி மீன்கள்மீன்வள பல்கலை. தகவல்</u>**

நாகை, : விலை மலிவாக கிடைக்கும் மத்தி மீன்கள் சர்க்கரை நோயாளிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கும் என்று நாகை மீன்வள பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. மனிதனின் உடல் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் புரதச்சத்து மிகவும் அவசியம். தாவரம், விலங்குகளிலிருந்து புரதம் நமக்கு கிடைக்கிறது. மாமிச புரதங்களில் மிக சிறந்தது மீன் புரதமாகும். இவற்றில் முக்கியமான ஒன்று மத்தி மீன்கள். ஆண்டுதோறும் ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை மத்தி மீன்கள் கிடைக்கிறது. ரூ.15 முதல் ரூ.20க்குள் மிக மலிவாக மத்தி மீன்கள் கிடைக்கும். மேலும் மத்தி மீன்களில் உடல் ஆரோக்கியத்திற்கு தேவையான கொழுப்பு, வைட்டமின்கள், தாதுச்சத்துக்கள் உள்ளது. 100 கிராம் மத்தி மீனில் புரதச்சத்து 20.9 கிராம், கொழுப்பு சத்து 10.5 கிராம், சாம்பல் சத்து 1.9 கிராம், நீர்ச்சத்து 66.70 கிராம் உள்ளது. மத்தி மீன்களில் ஒமேகா 3 கொழுப்பு அமிலம் அதிகம் உள்ளதால் ட்ரைகிளிசரைடுகள் அளவை குறைத்து இதய நோய் ஏற்படும் வாய்ப்பை குறைக்கிறது. மேலும் தோல்நோய், மூளை மற்றும் நரம்பு நோய்கள், வயதானவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தம், ஆஸ்துமா, முடி உதிர்தல் ஆகிய நோய்கள் வரும் வாய்ப்பை குறைக்கும். மத்தி மீனில் வைட்டமின் டி என்ற உயிர்ச்சத்து உள்ளது. இந்த சத்து செல்களின் செயல்பாட்டிற்கு உதவுகிறது. மத்தி மீன் பல்வேறு புற்று நோய்கள் ஏற்படும் வாய்ப்பை குறைக்கிறது. நீரிழிவு நோய்கள் உள்ளவர்கள், மத்தி மீனை உணவாக எடுத்து கொண்டால் நோய் எதிர்ப்பு திறன் அதிகரித்து ரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தலாம். மத்தி மீன்களில் கால்சியம் அதிகம் இருப்பதால் எலும்புகளின் வளர்ச்சிக்கு உதவுகிறது. பாஸ்பரஸ் சத்தும் இருப்பதால் எலும்புகளுக்கு வலிமை கிடைக்கிறது. மத்தி மீனில் வைட்டமின் பி 12 உள்ளது. இது உடலில் ஹோமோசைஸ்டீனின் அளவை சமநிலைப்படுத்தி இதய சுவர்களில் பாதிப்பு ஏற்படுவதை குறைக்கிறது. அயோடின் என்ற

தாதுச்சத்தும் உள்ளதால் முன் கழுத்துகழலை நோய் ஏற்படும் வாய்ப்பை குறைக்கிறது. மத்தி மீன் செல்களில் இருந்து கால்சியம் மாத்திரைகள் தயாரிக்கப்படுகிறது. இந்த மாத்திரைகளை உட்கொள்பவர்களின் தோல்கள் பளிச்சென்றும், நகங்கள் உறுதியாகவும், கண் பார்வை தெளிவாக இருக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய மருத்துவப்பயனுள்ள, விலை மலிவான மத்தி மீன்களை பொதுமக்கள் உண்ணும் வழக்கத்தை அதிகப்படுத்தி நோயின்றி வாழலாம். இவ்வாறு நாகை மீன்வள பல்கலைக்கழக மீன்வளத் தொழிலில் நுட்ப நிலைய இயக்குனர் முனைவர் நாகூர் மீரான், பேராசிரியர் கணேசன் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

**<u>18ம் கால்வாய் தண்ணீரால் விவசாய பரப்பு விரிவாக்கம் வறண்ட நிலங்கள் விளைநிலமானது</u>**

தேவாரம், : தேவாரம் பகுதியில் 18ம் கால்வாய் தண்ணீரால் விவசாய பரப்பு அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கம்பம் பள்ளத்தாக்கில் பெரியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரால் கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், கூடலூர், குச்சனூர் உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் நெல், வாழை, தென்னை, திராட்சை விவசாயம் செய்யப்படுவதால் பசுமையாக காட்சியளிக்கிறது. அதே நேரத்தில் பள்ளத்தாக்கின் மேற்கு பகுதியாக உள்ள தேவாரம், கோம்பை, பண்ணைப்புரம் உள்ளிட்ட ஊர்களை சுற்றிலும் உள்ள 30க்கும் மேற்பட்ட கிராமங்கள் தண்ணீரின்றி தத்தளித்தன. இதற்காகவே கூடலூர் வைரவன் ஆற்றில் இருந்து சுமார் 40 கிமீ தூரத்திற்கு கால்வாய் வெட்டப்பட்டு 18ம் கால்வாய் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தில் திறக்கப்படும் தண்ணீர் 44 கண்மாய்களில் தேக்கி வைக்கப்படும். பெரியாறு அணை நீர்மட்டம் 142 அடியை எட்டியதை தொடர்ந்து, கடந்த நவம்பர் மாதம் 18ம் கால்வாய் வழியாக தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் தேவாரத்தை சுற்றிலும் உள்ள கண்மாய்கள் நிரம்பின. இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்ததை அடுத்து மிகவும் வறண்ட நிலங்களில் கூட தற்போது கரும்பு, எள், கப்பை, சோளம், கம்பு, உள்ளிட்ட

பயிர்கள் விதைக்கப்பட்டுள்ளன. இதன் பயன் இன்னும் ஓரிரு மாதங்களில் கிடைக்கும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கோடைக் காலம் தொடங்கும் முன்பு மழை பெய்யத்தொடங்கினால் விவசாயிகள் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைவர். இங்கு விளையக்கூடிய கம்பு, சோளம், உள்ளிட்ட மானாவாரி பயிர்கள் அதிகளவில் அறுவடை செய்யப்படும். கால்நடைகளுக்கு இவை சிறந்த உணவு என்பதால், இப்போதே சிலர் மானாவாரி விவசாயிகளிடம் அட்வான்ஸ் புக்கிங் செய்யத்தொடங்கி உள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், 'தேவாரம் பகுதியில் தண்ணீர் இல்லாத நிலையில் விளையக்கூடிய நிலங்கள் கூட தரிசாக போடப்பட்டன. ஆனால் தற்போதோ 18ம் கால்வாய் தண்ணீர் மூலம் சோளம் உள்ளிட்ட பயிர்கள் நல்ல முறையில் விளைந்து வருகின்றன. இதனால் விவசாய பரப்பு அதிகரித்துள்ளது' என்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அந்தமான் அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தமிழ்நாட்டில் இன்று சில இடங்களில் மழை பெய்யும் என அறிவிப்பு**



சென்னை, தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை முடிந்துவிட்டது. அதன்பின்னர் கடுமையான பனிப்பொழிவு இருந்து வந்தது. அதன் காரணமாக இரவில் குளிர் அதிகமாக வாட்டியது. இந்த நிலையில் நேற்று காலை சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. அந்த அளவுக்கு குளிர் இல்லை. வழக்கமான குளிரைவிட சற்று குறைந்து காணப்பட்டது. அதைத்தொடர்ந்து நேற்று காலை சென்னையில் நுங்கம்பாக்கம், கடற்கரை சாலை உள்பட சில இடங்களில் லேசாக மழைதூறியது. இது குறித்து சென்னை

வானிலை அதிகாரி கூறியதாவது:– அந்தமான் அருகே 21–ந்தேதி குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. அது பின்னர் அந்தமான் தெற்கு பகுதிக்கும் தென்கிழக்கு வங்கக்கடலுக்கும் இடையே கொண்டுள்ளது. மேலும் குமரிக்கடல் அருகே மேலடுக்கு சுழற்சியும் உள்ளது. இந்த இரு காரணங்களால் தமிழ்நாட்டில் இன்றும்(வெள்ளிக்கிழமை), நாளையும் (சனிக்கிழமை) சில இடங்களில் மழை பெய்யும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**ஐரோப்பிய நாடுகளில் இந்திய காய்கறிகள் மீதான தடையை நீக்க நடவடிக்கை மத்திய மந்திரி தகவல்**



புதுடெல்லி, பாகற்காய் உள்பட 4 இந்திய காய்கறிகளுக்கும், மாம்பழத்துக்கும் ஐரோப்பிய கூட்டமைப்பு கடந்த மே மாதம் தடை விதித்தது. இதனால், இவற்றை ஐரோப்பிய நாடுகளுக்கு இந்தியாவில் இருந்து ஏற்றமதி செய்ய முடியவில்லை. இந்நிலையில், மாம்பழம் மீதான தடையை கடந்த 20–ந்தேதி ஐரோப்பிய கூட்டமைப்பு விலக்கியது. இதையடுத்து, 4 இந்திய காய்கறிகள் மீதான தடையையும் நீக்கச் செய்வதற்காக மத்திய அரசு உரிய நடவடிக்கை களை எடுத்து வருவதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை ராஜாங்க மந்திரி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். இதுதொடர்பாக, இங்கிலாந்து உள்ளிட்ட பல்வேறு ஐரோப்பிய நாடுகளுடனும், ஐரோப்பிய கூட்டமைப்பு அதிகாரிகளுடனும் தான் பேசி வருவதாக அவர் கூறினார்.

**அரியலூர் மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.14¾ லட்சம் மதிப்பில் வேளாண் இயந்திரங்கள் கலெக்டர் சரவணவேல்ராஜ் வழங்கினார்**



அரியலூர், அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த 11 விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறையின் சார்பில் ரூ.14 லட்சத்து 73 ஆயிரத்து 827 மதிப்பிலான வேளாண் இயந்திரங்களை கலெக்டர் சரவணவேல்ராஜ் வழங்கினார்.

வேளாண் இயந்திரங்கள்

அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில், வேளாண் பொறியியல் துறையின் சார்பில் 11 விவசாயிகளுக்கு ரூ.14 லட்சத்து 73 ஆயிரத்து 827 மதிப்பிலான வேளாண் இயந்திரங்களை கலெக்டர் சரவணவேல்ராஜ் வழங்கினார். பின்னர் அவர் பேசியதாவது:–

மானிய தொகை

வேளாண் பொறியியல் துறையின் சார்பில், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் 2014–2015 ன் கீழ், 8 விவசாயிகளுக்கு உழவு எந்திரங்களையும், 3 விவசாயிகளுக்கு சுழல் கலப்பைகளையும்(ரோட்டோவேட்டர்) வழங்கப் பட்டுள்ளது. இதில் உழவு எந்திரத்தின் மொத்த தொகை ரூ.12 லட்சத்து 1327 ரூபாயும், விவசாயிகளின் பங்களிப்பு தொகை ரூ.6 லட்சத்து 52 ஆயிரத்து 517 ஆகும். இவற்றில் ரூ.5 லட்சத்து 48 ஆயிரத்து 810 ரூபாய் அரசு மானியமாக வழங்கப்படுகிறது. இதேபோல் சுழல்கலப்பை(ரோட்டோவேட்டர்) கருவியின் மொத்த தொகை ரூ.2 லட்சத்து 72 ஆயிரத்து 500 ரூபாயும், விவசாயியின் பங்களிப்புத்தொகை ரூ.1 லட்சத்து 36 ஆயிரத்து 250 ரூபாயும், அவற்றில் ரூ.1 லட்சத்து 36 ஆயிரத்து 250 ரூபாய் அரசு மானியத் தொகையாக வழங்கப்படுகிறது என தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ஆரோக்கியசாமி, உதவி செயற்பொறியாளர்கள் மோகனகிருஷ்ணன், நெடுமாறன், ரெங்கநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

## எண்ணெய்யில் கலப்படம் செய்வதால் புற்றுநோய் அபாயம் வேளாண்துறை அதிகாரி தகவல்



எண்ணெய்யில் கலப்படம் செய்வதால் புற்றுநோய் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று வேளாண்மைத்துறை அதிகாரி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக திண்டுக்கல் வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) செல்வராஜ் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:– கலப்பட உணவுப்பொருட்கள் நாம் அன்றாடம் பயன்படுத்துகிற நல்ல எண்ணெய், கடலை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றில் மலிவான எண்ணெய்கள், ஆர்ஜிமோன் எண்ணெய், தாது எண்ணெய் போன்றவை கலப்படம் செய்யப்படுகிறது. இதனால் கண்பார்வை குறைபாடு, ஈரல் பாதிப்பு மற்றும் புற்றுநோய் ஏற்பட காரணமாகிறது. துவரம் பருப்பு, கடலை பருப்பு போன்ற பருப்பு வகைகளில் கேசரி பருப்பு கலப்படம் செய்யப்படுவதால் பக்கவாதம் ஏற்படுகிறது. மஞ்சள் தூளில் மஞ்சள் நிற காரீய குரோமிட் கலப்படம் செய்யப்படுவதால் ரத்த சோகை நோயும், மிளகாய் பொடியில் சிகப்பு நிறத்துக்காக காங்கோரெட் கலப்படம் செய்யப்படுவதால் புற்றுநோயும் ஏற்படுகிறது. இதேபோல் மல்லிப்பொடி, சாம்பார் பொடிகளில் மரத்தூள் மற்றும் மாவுப்பொருட்கள் கலப்படம் செய்யப்படுகிறது. கடலை மாவில் கேசரி பருப்புமாவு மற்றும் மக்காச்சோள மாவு போன்றவை கலப்படம் செய்யப்படுவதால் வயிற்றுக்கோளாறு ஏற்படுவதோடு மக்கள் பணமும் வீணாகிறது. நெய்யில் வனஸ்பதி மற்றும் மிருகக்கொழுப்பு கலப்படம் செய்யப்படுவதால் இதயம் பாதிக்கப்படுகிறது.

### அக்மார்க் முத்திரை

கலப்பட உணவுப்பொருட்களில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மைத்துறை சார்பில் அக்மார்க் தரம் பிரிப்பு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. தமிழகத்தில் 30

அக்மார்க் ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆய்வுக்கூடங்களில் அரிசி, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் வகைகள், வெண்ணெய், நெய், மசாலா பொடி, தேன், கோதுமை மாவு, மைதா, ரவை, கடலைமாவு, கூட்டுப்பெருங்காயம், சேமியா, விதையில்லாபுளி, எண்ணெய் புண்ணாக்கு போன்ற உணவுப்பொருட்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தரமான உணவு பொருட்களுக்கு அக்மார்க் முத்திரை சீட்டு ஒட்டப்படுகிறது. எனவே அக்மார்க் முத்திரையிடப்பட்ட உணவு பொருட்களை வாங்கி உபயோகப்படுத்துவதன் மூலம் கலப்படத்தினால் ஏற்படும் தீமைகளில் இருந்து பாதுகாப்பு பெறலாம். இதேபோல் அக்மார்க் உரிமம் பெற விரும்பும் உற்பத்தியாளர்கள் கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள வேளாண்மை வணிகத்துறை அலுவலகத்தை அணுகலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் துணை இயக்குநர் செல்வராஜ் கூறியுள்ளார்.

**<u>மாவட்டத்தில் ராகி விளைச்சல் அமோகம் விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

கிருஷ்ணகிரி மாவட்டத் தில் இந்த ஆண்டு ராகி அதிக அளவில் விளைச்சல் ஆகி உள்ள தாலும், நல்ல விலைக்கு போவதாலும் விவசாயி கள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர்.ராகிபயிர்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயிகள் அதிக அளவில் வசித்து வருகிறார்கள். அவர் களில் பலர் ராகி பயிரிட்டுள் ளார்கள். கிருஷ்ணகிரி மாவட் டத்தில், ஓசூர், தேன்கனிக் கோட்டை, சின்னேப்பள்ளி, வரட்டனப்பள்ளி, காவேரிப் பட்டணம், மலையாண்ட அள்ளி, வேலம்பட்டி, சந்தூர், ஆனந்தூர், கல்லாவி மற்றும் சுற்று வட்டாரத்தில் 48 ஆயிரத்து 944 ஹெக்டேர் பரப்பளவில் விவசாயிகள் ராகி பயிரிட்டுள்ளார்கள். குறிப்பாக கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், தேன்கனிக் கோட்டை தாலுகாவில் 40 ஆயிரம் ஹெக்டேர் பரப் பளவில் ராகி பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் யானைகள் ஓசூர் வனப்பகுதிக்குள் வந்து ராகி பயிர்களை தின்றும், கால் களால் மிதித்தும் நாசம் செய் வது தொடர்ந்து வருகின்றன. இது ஒரு புறமிருக்க, இந்த ஆண்டு ராகி பயிர் அதிக அள வில் விளைச்சல் ஆகியுள்ளது. இதனால் நல்ல விலையும் கிடைக்கிறது. இதனால்

விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது:- தேவை அதிகரித்துள்ளது கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ராகி விளைச் சலை காட்டிலும், இந்த ஆண்டு விளைச்சல் அதிகமாக உள்ளது. கிராம பகுதிகளில் ராகி அன்றாட உணவாக பயன்படுத்தப்பட்டு வந்தது. ராகி தற்போது பிஸ்கட், நூடுல்ஸ், கூழ் உள்ளிட்டவை தயாரிப்பதற்காகவும், வெளி மாநிலங்களின் தேவைக்காக வும் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. இதனால் ராகி பயிரின் தேவை அதிகரித்துள்ளது. இவ்வாறு கூறினார்கள்.

## <u>4,700 மூட்டை பருத்தி ரூ.70 லட்சத்துக்கு ஏலம்</u>



நாமக்கல்லில் 4,700 மூட்டை பருத்தி ரூ.70 லட்சத்துக்கு ஏலம் போனது.

பருத்தி ஏலம் நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென்னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது. இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம்பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 4,700 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

ரூ.70 லட்சத்துக்கு ஏலம்

இந்த பருத்தி மூட்டைகள் ரூ.70 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்து 560 முதல் ரூ.3 ஆயிரத்து 889 வரைக்கும், டி.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 29 முதல் ரூ.4 ஆயிரத்து 720 வரைக்கும், சுரபி ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 400 முதல் ரூ.4 ஆயிரத்து 809 வரைக்கும் ஏலம் போனது. இந்த

பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர். பருத்தி சீசன் தொடங்கி விட்டதால், இனிவரும் காலங்களில் பருத்தி மூட்டைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

## <u>அவினாசியில் பருத்தி ஏலத்தில் வரத்து அதிகரிப்பு</u>



அவினாசி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்திற்கு 11,500 மூடைகள் வந்திருந்தன. இதில் ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3,400 முதல் ரூ.3,850 வரையிலும், டி.சி.எச். ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3,900 முதல் ரூ.4,550 வரையிலும், மட்ட ரகம் ரூ.1,400 முதல் ரூ.1,800 வரையிலும் வியாபாரிகள் ஏலத்தில் எடுத்தனர். திருப்பத்தூர், போச்சம்பள்ளி, தர்மபுரி, கோபி, சத்தி மற்றும் அவினாசி சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து பருத்தி மூடைகள் ஏலத்திற்கு வந்தன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளும், 25 வியாபாரிகளும் ஏலத்தில் கலந்து கொண்டனர். ஏலத்தின் மொத்த மதிப்பு ரூ.2 கோடி ஆகும். இதுகுறித்து சங்க நிர்வாகிகள் கூறுகையில், மார்க்கெட்டில் பஞ்சு தேக்கம் காரணமாக கடந்தவாரத்தை காட்டிலும் இந்த வாரம் பருத்தி குவிண்டாலுக்கு ரூ.200 குறைந்தது.

இன்றையவேளாண்செய்திகள்

**<u>இங்கு எல்லாமே இயற்கைதான்! - வி.ஐ.பி விவசாயி</u>**



அந்தத் தோட்டத்துக்குள் நுழைந்தவுடனேயே ஒரு பக்கம் வெண்டை, கத்தரி, அவரை, கொத்தவரங்காய், பீன்ஸ், பாகற்காய், சுரைக்காய், புடலை, கோவைக்காய், தக்காளி, முள்ளங்கி, வாழைக்காய், வெள்ளரிக்காய், முருங்கைக்காய், மிளகாய் என காய்கறிப் பயிர்கள் செழித்து விளைந்துள்ளன. மலைக் காய்கறிகள் எனப்படும் காலிபிளவர், கேரட்கூட அந்தத் தோட்டத்தில் விளைகின்றன. மற்றொரு பக்கம் அரைக்கீரை, சிறுகீரை, முளைக்கீரை, தவசிக் கீரை, அகத்தி, பொன்னாங்கண்ணி, பசலைக் கீரை, மணத்தக்காளி, முருங்கைக் கீரை, முடக்கத்தான், தூதுவளை, வல்லாரை, வேளைக்கீரை எனக் கிட்டதட்ட எல்லாக் கீரை வகைகளுமே கண்களுக்குக் குளிர்ச்சியாய் வளர்ந்துள்ளன. இன்னொரு புறம் மரத் தோட்டமாகக் காட்சியளிக்கிறது. அப்பகுதியில் மா, பலா, கொய்யா, சப்போட்டா, நெல்லி, வாழை எனப் பழ மரங்கள் நூற்றுக் கணக்கில் நிறைந்திருக்கின்றன. அரிசி, உளுந்து, பச்சைப் பயறு போன்ற உணவு தானியங்களும் அங்கு உற்பத்தியாகின்றன. இவ்வளவு உணவுப் பொருட்களை விளைவிக்கும் இந்தத் தோட்டத்துக்கு இரண்டு முக்கியச் சிறப்புகள் உண்டு. செயற்கை உரங்களோ, பூச்சிக்கொல்லிகளோ அறவே பயன்படுத்தாமல் முழுக்க முழுக்க இயற்கை விவசாய முறையில் உற்பத்தி நடைபெறுவது முதல் சிறப்பு. அரசியல் கட்சித் தலைவர் ஒருவரின் தோட்டத்தில், அவருடைய நேரடி மேற்பார்வையில் இந்த இயற்கை சாகுபடி நடைபெறுகிறது என்பது மற்றொரு சிறப்பு.

**நஞ்சில்லா உணவு**

திண்டிவனம் அருகே தைலாபுரத்தில் உள்ள பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தோட்டத்தில்தான் இந்த இயற்கை வேளாண்மை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. திண்டிவனம் பகுதியில் திரும்பும் திசையெல்லாம் வண்ண வண்ணக் கொடிகளும், குடைகளும் நடப்பட்டு விளைநிலங்களெல்லாம் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு விற்பனைக்காக காத்துக் கிடக்க, தைலாபுரம் தோட்டத்தில் மட்டும் தமிழகத்தின் பல்வேறு வகை பயிர்கள் ஒரே இடத்தில் சாகுபடி செய்யப்படுகின்றன. தைலாபுரத்தில் உள்ள தனது குடும்பம், திண்டிவனத்தில் உள்ள மகள் குடும்பம், சென்னையில் உள்ள மற்றொரு மகள் குடும்பம், சென்னையில் வசிக்கும் மகன் அன்புமணி குடும்பம் எனத் தனது குடும்ப உறவுகள் அனைவரது உடல்நலனும் இந்தத் தோட்டத்தின் விளைபொருள்களால்தான் பாதுகாக்கப்படுகின்றன என்பதைப் பெருமிதத்துடன் கூறுகிறார் டாக்டர் ராமதாஸ். அரிசி, காய்கறிகள் உட்பட தைலாபுரம் தோட்டத்தில் விளையும் நஞ்சில்லா உணவு வகைகள்தான் இவர்கள் அனைவரது குடும்பங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. தைலாபுரம் தோட்டத்தில் சுமார் 30 ஆண்டுகளாக இயற்கை சாகுபடி முறையில் உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்கிறார் ராமதாஸ்.

**உற்சாக விவசாயம்**

பொங்கல் கொண்டாட்டத்துக்காக தைலாபுரம் தோட்டம் சுறுசுறுப்பாகத் தயாராகிக் கொண்டிருந்த நேரத்தில், தனது தோட்டத்தின் இயற்கை வேளாண்மை சாகுபடி பற்றி உற்சாகமாக விவரித்தார் ராமதாஸ். “திண்டிவனத்தில் முழு நேர மருத்துவத் தொழிலில் ஈடுபட்டிருந்த 1974-ம் ஆண்டில் தைலாபுரத்தில் 25 ஏக்கர் நிலம் வாங்கினேன். அப்போது கரடு முரடாக இருந்த அந்த நிலத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பண்படுத்தினேன். அப்போது திண்டிவனத்திலிருந்து தினமும் அதிகாலை 4 மணிக்கெல்லாம் இங்கே வந்துவிடுவேன். காலை 10 மணிவரை நிலத்தை சமப்படுத்துவது, உழுவது, பண்படுத்திய நிலத்தில் பயிர் வைப்பது எனப் பல வேலைகளில்

நானே ஈடுபடுவேன். அதற்குப் பிறகு திண்டிவனம் புறப்பட்டுச் சென்று, மருத்துவத் தொழிலைப் பார்ப்பேன். பத்தாண்டுகளுக்கு முன்பு எனது மருத்துவமனையைத் திண்டிவனத்தில் உள்ள எனது மருமகனிடம் ஒப்படைத்துவிட்டு, தைலாபுரம் தோட்டத்திலேயே வீடு கட்டி இங்கேயே நிரந்தரமாகக் குடியேறிவிட்டேன். இங்கு நடைபெறும் ஒவ்வொரு வேளாண் நடவடிக்கையிலும் நேரடியாக நானே ஈடுபடுகிறேன்.

**தனி ருசி**

தொடக்கத்திலிருந்தே ரசாயன உரங்கள் எதுவும் பயன்படுத்தாமல், தொழு உரம் மற்றும் இலை தழைகளைப் பயன்படுத்தி மட்டுமே சாகுபடி செய்துவருகிறேன். இயற்கை சாகுபடிக்கான நம்மாழ்வாரின் இயக்கம் தமிழ்நாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் பிறகு எங்கள் தோட்டத்திலும் மண்புழு உரம், பஞ்சகவ்யம் போன்றவற்றையும் பயன்படுத்தி வருகிறோம். வேப்பிலை, வசம்பு, பூண்டு போன்றவற்றை அரைத்து, தண்ணீரில் ஊற வைத்து, அந்தக் கரைசலைப் பயிர்களில் தெளிக்கிறோம். இது சிறந்த பூச்சி விரட்டியாகச் செயல்படுகிறது. இவ்வாறு நஞ்சான ரசாயனம் எதுவுமின்றி எங்கள் தோட்டத்தில் விளைவிக்கப்படும் உணவுப் பொருட்களின் ருசியே தனி ருசிதான். இந்த ருசி கடைகளில் விற்கப்படும் எந்த உணவுப் பொருளிலும் கிடைக்காது" என்று இயற்கை வேளாண்மை விளைபொருள்களின் சிறப்புகளை அடுக்கிக்கொண்டே போனார்.

**பூச்சிக்கொல்லி ஆபத்து**

நம் நாட்டின் பெரும்பகுதி மக்கள் செயற்கை உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களைத்தானே சாப்பிடுகின்றனர் எனக் கேட்டபோது, தன் பெரும் கவலையை வெளிப்படுத்தினார் ராமதாஸ். "ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தி சாகுபடி செய்யும் வயல்களில் விளையும் உணவு வகைகளைச் சாப்பிடுவதால் ஏற்படும் பக்கவிளைவுகள் கொஞ்ச நஞ்சமல்ல. உலகம் முழுவதும் கொடிய விஷமாகக் கருதித் தடை

செய்யப்பட்டுள்ள 12 வகையான பூச்சிக்கொல்லிகள் நம் நாட்டில் மட்டும் சுதந்திரமாக விற்பனை செய்யப்படுகின்றன. அந்தக் கொடிய விஷ மருந்துகளை நம்மூர் விவசாயிகள் தாராளமாகப் பயன்படுத்துகின்றனர். உதாரணமாக, சென்னை மாநகரைச் சுற்றியுள்ள கிராமங்களில் பலர் கீரை சாகுபடி செய்கின்றனர். அவர்கள் பிற நாடுகளில் தடை செய்யப்பட்டிருக்கும் ஒரு கொடிய விஷத்தைப் பூச்சிக்கொல்லி மருந்தாகத் தெளிக்கின்றனர். அந்தக் கீரை பார்ப்பதற்குப் பச்சைப் பசேலென இருக்கும். ஆனால், அந்தக் கீரையைச் சமைத்து சாப்பிடுபவர்களுக்கு ஏற்படும் பக்கவிளைவுகள் ஏராளம். இது போலவே பூச்சிக்கொல்லிகள் மற்றும் ரசாயன உரம் பயன்படுத்தி உற்பத்தி ஆகும் என நஞ்சு கலந்த உணவையே பெரும்பாலோர் உண்கின்றனர். இந்தக் கொடிய சூழலிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை மத்திய, மாநில அரசுகளுக்கு உள்ளது. உலக நாடுகளில் தடை செய்யப்பட்ட பூச்சிக்கொல்லி களை நமது நாட்டிலும் தடை செய்ய வேண்டியது முதல் கடமை. அவற்றையும் மீறி அந்தக் பூச்சிக்கொல்லிகளை விற்போரை கடுமையாகத் தண்டிக்க வேண்டும்.

**ஊக்கம் தேவை**

இயற்கை விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளை அரசு ஊக்கப்படுத்த வேண்டும். அவர்களுக்கு அதிக மானியம் வழங்குவதோடு, சரியான சந்தை வாய்ப்பையும் அரசு ஏற்படுத்தித் தர வேண்டும். நாட்டுப் பசு, எருமை மாடு வாங்கவும், வளர்க்கவும் விவசாயிகளுக்கு அரசு உதவிகளை செய்ய வேண்டும். இயற்கை வேளாண்மையின் மகத்துவம் பற்றி நம்மாழ்வார் நடத்திய பிரச்சாரம் தமிழக விவசாயிகள் மத்தியில் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் நமது விவசாயிகள் மத்தியில் மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி அடுத்த கட்டத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது. இயற்கை வேளாண்மை என்பது மக்களின் உடல்நலத்தோடு தொடர்புடையது. நீடித்த வேளாண்மை வளர்ச்சிக்கும் மிகவும் அவசியமானது. இதை உணர்ந்த காரணத்தால்தான் தொடக்கத்திலிருந்தே இயற்கை விவசாயத்தில் நான் அதிக ஈடுபாடு காட்டி வருகிறேன். இயற்கை விவசாயத்தை பரவலாக்க மத்திய,

மாநில அரசுகளும் முன்வர வேண்டும்" என்றார். முக்கியமான அரசியல் கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் தலைநகர் சென்னையில் குடியேறி இருக்கும்போது, தைலாபுரம் என்ற கிராமத்திலிருந்து அரசியல் நடத்திவருகிறார் டாக்டர் ராமதாஸ். இந்த விஷயத்தில் மற்ற அரசியல்வாதிகளுக்கு முன்னோடியாகவே திகழ்கிறார் ராமதாஸ். **தொடர்புக்கு:** devadasan.v@thehindutamil.co.in

**<u>ஆடு, மாடு, கோழி இருந்தால் மாதம் ரூ. 30 ஆயிரம் வருமானம்</u>**



இரண்டரை ஏக்கர் நிலம், நாட்டு மாடு இரண்டு, வெள்ளாடு ஐந்து, நாட்டுக் கோழி நூறு ஆகியவற்றுடன் உழைப்பை மூலதனமாகக்கொண்டு மாதம் அறுபதாயிரம் ரூபாய் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார் விவசாயி கணேசன். ஒரத்தநாடு அருகிலுள்ள சோழகன்கரை கிராமத்தைச் சேர்ந்தவர் கணேசன். ஆறாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த போதே, அவருடைய அப்பா இறந்து விட்டதால் படிப்புக்கு முழுக்கு போட்டுவிட்டு நிலத்தில் இறங்கினார். தொடக்கத்தில் ரசாயன உரங்களைப் போட்டுத்தான் அவரும் விவசாயம் பார்த்தார். ஆனால், கடந்த 12 வருடங்களாக இவரது நிலத்தில் ஒரு துளி ரசாயன உரம்கூட விழவில்லை; முழுக்க முழுக்க இயற்கை வேளாண்மைதான்.

**ஏன் இயற்கை விவசாயம்?**

அது எப்படிச் சாத்தியமானது? விளக்குகிறார் கணேசன். “வயல்களில் பூச்சிக்கொல்லி அடிக்குறப்ப புழு - பூச்சிக செத்து மடியுறத கண்ணால பார்த்திருக்கேன். பூச்சி மருந்து அடிச்சுட்டு வந்து ராத்திரி படுத்தோம்னா உடம்பு தீயா எரியும். பொணம் மாதிரித்தான் கெடப்பேன். ஒரு கட்டத்துல, ஏன் இப்படி மருத்தைக் கொட்டி மண்ணை நஞ்சாக்கணும்னு யோசிச்சேன். அப்பலருந்து ரசாயன உரங்களைத் தொடுறதில்லை. எவ்வளவு விளைஞ்சாலும்

பரவாயில்லை, ரசாயன உரம் போடக் கூடாதுன்னு தீர்மானிச்சுட்டேன். ரெண்டு மூணு வருசம் கஷ்டமாத்தான் இருந்துச்சு. போகப்போக மண் துளிர்த்திருச்சு. ஆடு, மாடு, கோழி சார்ந்த இயற்கை சூழலில் நாமளும் தோட்டத்துக்குள்ளேயே குடியிருக்கணும். அப்பத்தான் உண்மையான மகசூலைப் பார்க்க முடியும்.

**பயிரும் உயிரும்**

என்கிட்ட ரெண்டு பசுமாடு, அஞ்சு வெள்ளாடு, நூறு நாட்டுக் கோழி இருக்கு. இதுகளோட திட, திரவக் கழிவுகளைச் சேமிக்கிறதுக்காக இயற்கை உரக் குழி வச்சிருக்கேன். காலையில மாட்டுக் கொட்டடியைக் கழுவிவிட்டா கழிவு எல்லாம் அந்தக் குழிக்குள்ள போயிரும். தோட்டத்துக்குப் போற தண்ணிய இந்தக் குழிக்குள்ளவிட்டு அங்க இருந்துதான் செடிகளுக்குத் தண்ணி பாயும். கொடிக் காய்கள் அஞ்சு, செடிக் காய்கள் அஞ்சு இது மட்டும்தான் நான் போட்டிருக்கேன். விதை நடுவேன், தண்ணீர் பாய்ச்சுவேன், களை பறிப்பேன், காய் பறிப்பேன். இதைத் தவிர வேறெதுவும் செய்றதில்லை. நூறு கிலோ காய் எடுத்தோம்னா, அதுல 25 கிலோவுக்குப் பூச்சி இருக்கத்தான் செய்யும். இதுக்காக நான் கவலைப்படுறதில்லை. பூச்சிக் காய்களை அப்படியே ஆடு - மாடுகளுக்குத் தீனியா போட்டுருவேன்.

**நஞ்சில்லா உணவு**

தோட்டத்துல மா, எலுமிச்சை, ஆரஞ்சு மரங்களும் இருக்கு. இந்த மரங்கள்ல இருக்கிற பெரிய வகை எறும்புகள் அப்படியே வயலுக்குள்ள வந்து பூச்சிகளை ஓரளவுக்குத் தின்னு அழிச்சிரும். காய் - கனிகள் காய்ச்சு முடிஞ்சா அதன் செடி - கொடிகள் மட்டுமே ஆண்டுக்கு 20 டன் வரைக்கும்வரும், அதையும் அப்படியே தோட்டத்துக்குள்ள உரமா புதைச்சிருவேன். நம்ம மட்டும் உரம் போடாம இருந்து, பக்கத்துத் தோட்டங்கள்ள உரம் போட்டுருந்தா மழை தண்ணியில அந்த உரங்கள் நம்ம தோட்டத்துக்கும் வந்துரும். அதனால அக்கம்பக்கம், அடுத்த ஊர், பக்கத்து ஊர் விவசாயிகளை எல்லாம் இயற்கை விவசாயத்துக்கு

மாத்தினேன். இப்படிச் சேர்ந்த சுமார் 250 விவசாயிகளைக் கொண்டு ‘தமிழ்நாடு நஞ்சில்லா உணவு உற்பத்தி மற்றும் விற்பனை மைய'த்தை 2012-ல ஆரம்பிச்சோம்.

**எல்லாமே இயற்கை**

இந்த அமைப்பில் உள்ளவர்கள் காய், கனிகள் மட்டுமின்றி நெல், மீன் வளர்ப்பு, விவசாயம் உள்ளிட்டவற்றை இயற்கை முறையில் மேற்கொள்கிறார்கள். நாங்க உற்பத்தி செஞ்ச பொருட்களுக்கு ஒவ்வொரு வருசமும் சித்திரை முதல் தேதில விலை நிர்ணயம் செய்வோம். அந்தச் சமயம் தக்காளி கிலோ 25 ரூபாய்னு நிர்ணயம் செஞ்சா, ஒரு வருசத்துக்கு அதுதான் விலை. தக்காளி விலை 70 ரூபாய்க்குப் போனாலும் 2 ரூபாய்க்குப் போனாலும் எங்களிடம் 25 ரூபாய்தான் விலை. இதன் மூலம் நுகர்வோருக்கு மட்டுமில்லாம விவசாயிகளுக்கும் பாதிப்பு வராத வகைல பாத்துகிறோம். என் மனைவி ரேவதி 10-ம் வகுப்புத்தான் படிச்சிருக்கார். கணவர் நிறுவனத்துல உத்தியோகம் பார்க்கலியேங்கிற ஆதங்கம் அவருக்கு முதல்ல இருந்துச்சு. இப்போ எனக்கு வரும் பாராட்டுகளையும் தொலைபேசி அழைப்புகளையும் பார்த்துட்டு அவரும் பூரிச்சுப் போயிருக்கார். நாட்டு மாடு ரெண்டு, வெள்ளாடு அஞ்சு, நாட்டுக் கோழி இருபது இருந்தாபோதும் ஒரு ஏக்கரில் மாதம் முப்பதாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்கலாம். யாரு கையையும் எதிர்பார்த்துட்டு உக்காந்துருக்க வேண்டியதில்லை” என்று அனுபவத்தை அழகாய்ச் சொல்கிறார் கணேசன்.

கணேசனைத் தொடர்பு கொள்ள: 9626695141

## வெளிநாடுகளுக்கு வெண்டை: தேனி விவசாயி சாதனை



வெண்டை சாப்பிட்டால் அறிவு வளரும் என்பது பரவலான நம்பிக்கை. அந்த வெண்டையை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து செல்வத்தை வளர்த்திருக்கிறார் தேனி விவசாயி. தேனி மாவட்டத்தில் உள்ள ஆண்டிப்பட்டி,

புள்ளிமான்கோம்பை, அணைக்கரைப்பட்டி, பூதிப்புரம் உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட ஊர்களில் 2 ஆயிரம் ஏக்கருக்கு மேல் வெண்டை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் விளையும் வெண்டைக்காய் பெரும்பாலும் உள்ளூர், வெளிமாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுவருகிறது. இந்நிலையில் ஆண்டிப்பட்டி அருகே புள்ளிமான் கோம்பையைச் சேர்ந்த விவசாயி பி. பால்ராஜ் சிங்கப்பூர், துபாய் போன்ற நாடுகளுக்கு வெண்டைக்காய் ஏற்றுமதி செய்கிறார். ஆண்டு முழுவதும் வெண்டை சாகுபடி செய்யலாம். இவருக்குச் சொந்தமான 5 ஏக்கர் நிலத்தில் 20ஆண்டுகளாக வெண்டை சாகுபடி செய்துவருகிறார். ஒரு ஏக்கரில் சாகுபடி செய்ய ஒன்றே கால் கிலோ விதை தேவை. உழவு, மருந்து, களையெடுத்தல் ஆகியவற்றுக்குப் பின் ஒன்றரை மாதத்தில் வெண்டைக்காய் பறிக்கத் தயாராகி விடும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் பறிக்கத் தொடங்கலாம். வாரத்துக்கு ஒரு முறை மருந்து அடிக்கவேண்டும். சராசரியாக ஒரு வாரத்துக்கு 2 ஆயிரம் கிலோ வரை வெண்டை கிடைக்கும். மூன்று மாதங்களுக்குத் தொடர்ந்து காய் பறிக்கலாம்.



**தரம் முக்கியம்**

"செலவு போக வாரத்துக்கு ரூ.10 ஆயிரம்வரை லாபம் கிடைக்கும். வரத்து அதிகமானால் விலை சரியத் தொடங்கிவிடும். மேலும் வாகனச் செலவு, காய்களை மூட்டை போடச் சாக்கு, கமிஷன் மண்டிக்குக் கொடுக்க வேண்டிய கமிஷன் எனக் கூடுதல் செலவு ஏற்பட்டு வந்தது. இதனால் கவலைப்பட்டு கொண்டிருந்தோம். இந்நிலையில் காய்கறிகளை ஏற்றுமதி செய்யும் ஏஜென்ட்களோ, வெண்டையைப் பறித்துக் கொடுத்தால்போதும் தாங்களே மற்றச் செலவுகளை ஏற்றுக்கொண்டு அன்றைய சந்தை விலையைவிட கிலோவுக்கு ரூ.10 கூடுதலாகக் கொடுத்து எடுத்துக்கொள்வதாகக் கூறினர்.

கடந்த ஓராண்டாக அவர்களிடம் கொடுத்து வருகிறோம். ஒரே விஷயம் வெண்டை நல்ல தரத்தில் இருக்க வேண்டும்" என்கிறார்.

**சாகுபடி அதிகரிப்பு**

இப்படி வாங்கப்படும் வெண்டை 10 கிலோ எடையுடன் தனித்தனிப் பெட்டிகளில் அடைத்து விமானம் மூலம் சிங்கப்பூர், துபாய் என வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. "எனது ஆலோசனையைக் கேட்ட பல விவசாயிகள் வெண்டை சாகுபடி செய்து ஏற்றுமதி மூலம் அதிக லாபம் சம்பாதித்து வருகின்றனர். மாவட்டத்தில் தற்போது வெண்டை சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது. உசிலம்பட்டி, தர்மத்துப்பட்டி பகுதி விவசாயிகளும் வெண்டை சாகுபடியில் தீவிரம் காட்டி வருகின்றனர்" என்றார்.

பால்ராஜை தொடர்புகொள்ள: 86081 44255